**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் – திருநெல்வேலி பிரிவு.**
**கல்லூரியில் பயிலும் வீரர், வீராங்கனைகளுக்கான தமிழக அரசின் சிறப்பு விளையாட்டு விடுதி**
**செய்திக்குறிப்பு**

தமிழக அரசு விளையாட்டுத் துறையின் கீழ் செயல்பட்டு வரும், தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலமாக கல்லூரிகளில் பயிலும் மாணவ மாணவியர்களுக்கு விளையாட்டுத் துறையில் சாதனைகள் படைப்பதற்கு ஏற்ப அறிவியல் அடிப்படையிலான பயிற்சி மற்றும் தங்குமிடவசதியுடன் சத்தான உணவுடன் கூடிய சிறப்பு விளையாட்டு விடுதிகள் சென்னையில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**மாணவர்களுக்கான விளையாட்டு விடுதி** – சென்னை நேரு விளையாட்டு அரங்கம் மற்றும் கோவில்பட்டி தூத்துக்குடி மாவட்டம்.

**மாணவியருக்கான விளையாட்டு விடுதி** – சென்னை நேரு உள் விளையாட்டு அரங்கம்.

**விளையாட்டுத் தகுதிகள்.**

- மேற்காணும் சிறப்பு விளையாட்டு விடுதிகளில் உள்ள விளையாட்டுக்களில் பயிற்சி பெற்று சிறந்த விளையாட்டு வீரர்களாக விளங்குவதற்கு 12 – ஆம் வகுப்பில் தேர்ச்சி பெற்ற / பயிலும் மாணவ/ மாணவியர் தகுதியுடையவர் ஆவர்.
- தனிப்போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு / பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் / அங்கீகரிக்கப்பட்ட கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் மூன்று இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது தமிழ்நாடு அணியில் தேர்வு செய்யப்பட்டு தேசிய அளவில் ( SGFI) / கழகங்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகள் (Federation/National Games) / (RGKA) நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணபிக்கலாம்
- குழுப் போட்டிகளில் விண்ணப்பிப்பவர்கள் மாநில அளவில் குடியரசு/ பாரதியார் தின விளையாட்டுப் போட்டிகள் கழகங்கள் நடத்தும் போட்டிகளில் முதல் இரண்டு இடங்களில் வெற்றி பெற்றிருத்தல் வேண்டும். அல்லது மாநில அளவில் தேர்வு பெற்று தேசிய அளவில் அங்கீகரிக்கப்பட்ட இந்திய பள்ளிகள் விளையாட்டுக் கூட்டமைப்பு (SGFI)/கழகங்கள், தேசிய விளையாட்டுப் போட்டிகள் (Federation / National Games) / ஊரக விளையாட்டுப் போட்டிகள் (RGKA) நடத்தும் போட்டிகளில் கலந்து கொண்டவர்களும் விண்ணப்பிக்கலாம்.
- கையுந்து பந்து விளையாட்டில் 185 செ.மீ–க்கு மேல் உயரமுள்ள மாணவ/மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- 2017–2018 ஆம் ஆண்டிற்கான சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர்வதற்கு கீழ்காணும் விளையாட்டுகளில் மாணவர்/மாணவியர் சேர்க்கை நடைபெற உள்ளது.

**மாணவர்களுக்கான விளையாட்டுக்கள்**

1.தடகளம், 2. கூடைப்பந்து, 3. குத்துச்சண்டை, 4. கையுந்துபந்து, 5. பளுதூக்குதல், 6. ஜீடோ,
7. இறகுபந்து மற்றும் 8. ஹாக்கி.

**மாணவியர்களுக்கான விளையாட்டுக்கள்**

1.தடகளம், 2. குத்துச்சண்டை, 3.கையுந்துபந்து, 4. கால்பந்து மற்றும் 5. ஜீடோ.

விளையாட்டில் சிறந்து விளங்கும் மற்றும் ஆர்வம் கொண்டுள்ள மாணவ/ மாணவியர் அதற்கான உரிய படிவங்களை மார்ச் **06.04.2017 – முதல் முனைவர்.க.சேவியர் ஜோதி சற்குணம்,** மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், St. தாமஸ் ரோடு, அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை – 627 002. என்ற முகவரியிலும், மேலாளர், விளையாட்டு விடுதி, St. தாமஸ் ரோடு, அண்ணா விளையாட்டரங்கம், பாளையங்கோட்டை – 627 002. என்ற முகவரியிலும், அணுகி இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். 2017–2018 ஆம் வருட சேர்க்கைக்கான விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்திடவும், விளையாட்டு விடுதி சார்பான விவரங்களை தெரிந்து கொள்ளவும். www.sdat.tn.gov.in. என்ற இணைய தள முகவரியை பயன்படுத்தவும்.

**பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் அனைத்தும் 18.04.2017 –க்குள் மேலாளர், சிறப்பு விளையாட்டு விடுதி, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கம், பெரியமேடு, சென்னை – 600 003 என்ற முகவரியில் நேரிலோ அல்லது தபால் மூலமாகவோ கிடைக்குமாறு அனுப்ப வேண்டும்.**

சிறப்பு விளையாட்டு விடுதியில் சேர விரும்பும் மாணவ/மாணவியர்களுக்கான மாநில அளவிலான தேர்வு 18.04.2017 அன்று சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் நடைபெறும். தேர்வுப் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவ/மாணவிகள் 18.04.2017 அன்று காலை 8.00 மணிக்குள் சென்னை, ஜவஹர்லால் நேரு விளையாட்டரங்கில் ஆஜராகுமாறு தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

மேற்கண்ட தகவலை திருநெல்வேலி மாவட்ட விளையாட்டு இளைஞர் நலன் அலுவலர் மற்றும் மேலாளர், விளையாட்டு விடுதி அவர்கள் தெரிவித்தார்கள்.

ஒம்/–
மாவட்ட விளையாட்டு மற்றும்
இளைஞர் நலன் அலுவலர்
திருநெல்வேலி.